உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 17 || பராபவஹ சித்திரைத் திங்கள் 1ம்வ [14-4-66] || இதழ் 4

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 17 இதழ் 3-ன் தொடர்ச்சி)

சமரிற் பட்டவர் வெட்டிய பூதத்
தலைவர்கள் நிற்பமுதற்
ருமறை நாயகன் வயிறு கிழித்துத்
தந்தொழில் தலைநின்ருங்
கமரிற் குரிய மடக்கொடி யாரை
அலைத்தனர் பற்றியெயிற்
றவுண ரெனத்தமை உணரார் கணவர்கள்
ஆர்ப்பில் வெடித்தபெரும்

கமரிற் குருதி பிலத்தை நிரப்பிடு
களமெதிர் கண்டினியக்
காரவு ணக்கடல் சூரொடு மாளக்
கடிதிற் றடிதியடற்
குமரக் கடவு ளெனப்பணி வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி. 38

போரிலே இறந்து பட்டவர்களாகிய அசுரர்கள், தம்மை வெட்டிய பூதகணத் தலைவர்கள் எதிரிலே இருக்க, முதன்மையை யுடைய தாமரை நாயகனுகிய சூரியனது மண்டலத்தைக் கீண்டு சென்று வீரசுவர்க்கம் புகுதலாகிய தமது தொழிலிலே தலைப் பட்டு நின்று, அங்கே போரில் வீரமரணம் அடைந்தோர் பெறு தற்கு உரியவர்களாக உள்ள தெய்வ மங்கையரை அலைத்துப் பற்றினவர்களாய்த் தம்மை அசுரரென உணரார்தவர்களாய், பூதகணத் தலைவர்கள் செய்த ஆரவாரத்தில் வெடித்த பெரிய நிலப்பினப்பில் பாய்ந்த குருதி, பாதாளத்தை நிரப்புகின்ற போர்க்களத்தை எதிரிலே பார்த்து, இனி அந்தக் கரிய அசுரர் களது கடல் போன்ற கூட்டம் சூரபன்மனேடு மாளும்படி விரை விலே கொல்லுவாயாக! வலிமையையுடைய குமரக் கடவுளே! என்று பணிகின்ற வேற்படையை உடையனே! சப்பாணி கொட்டுவாயாக. கொழிக்கின்ற தமிழ் வழங்கும் வேதபுரியில் வீற்றிருக்கின்ற குமரேசனே! சப்பாணி கொட்டுவாயாக.

அற்ற வுடற்குறை யிற்ற முடித்தலை
அங்கைத் தலம்வைத்திட்
டாடு பறந்தலை யோடுதி ரப்புனல்
ஆறு கடத்துகெனும்
சிற்றல கைக்கொரு பேரல கைப்பெண்
தேரழி யக்கழியும்
திகிரிப் பரிசில் விடப்படு சுழியிற்
றெருமரல் மட்பகைஞன்
பற்றிய திரிகை திரித்து விடத்திரி
பரிசென வுஞ்சுழலும்
பம்பர மெனவும் வரும்படி யவுணர்
படக்கள வேள்விசெயாக்

கொற்ற மகட்புண ருஞ்சுடர் வேலவ
 கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
 கொட்டுக சப்பாணி. 39

போரிலே வெட்டுப்பட்ட உடற் குறையானது, தனது வெட்டப்பெற்ற முடித் தலையை அழகிய கைத்தலத்தில் வைத்துக் கொண்டு ஆடுகின்ற போர்க்களத்திலே ஓடுகின்ற உதிரப் புனல் ஆற்றைக் கடத்துக என்ற சிறிய பேய்க்கு, ஒரு பெரிய பேய்ப்பெண் தேரொன்று அழிந்துபோக அதிலிருந்து கழன்ற சக்கரத்தைப் பரிசிலாக விட, அது விட்ட சுழியிற் சுழலுதல், குயவன் பற்றிய சக்கரத்தைச் சுற்றிவிட அது சுழலும் தன்மையைப் போலவும் சுற்றுகின்ற பம்பரத்தைப் போலவும் வரும்படி அசுரர்கள் இறந்துபடக் களவேள்வி செய்து வீரத் திருமகளைப் புணருகின்ற ஒள்ளிய வேற்படையை உடையவனே! சப்பாணி கொட்டுவாயாக. கொழிக்கின்ற தமிழ் வழங்கும் வேதபுரியில் வீற்றிருக்கின்ற குமரேசனே! சப்பாணி கொட்டுவாயாக.

வளரிள வனமுலை மலைமக ளுக்கொர் தவப்பேறே
 மறிதிரை பொரநிமிர் கருணை கொழித்த பெருக்காறே
அளியுமி னமுதெழு வெளியினில் வைத்த சுவைத்தேனே
 அறமுது தவமொடு வரை வளர்த்திடு நற்ருயே
களிமயில் கடவிவி ணடைய முடுக்கிய புத்தேளே
 கலைமறை யெனுமுரல் வரியளி மொய்த்த மலர்க்காவே
தெளிதமிழ் பழகிய மதவலி கொட்டுக சப்பாணி
 தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. 40

வளருதலையுடைய இளமையான அழகிய கொங்கையினளாகிய மலைமகளுக்கு ஒப்பற்ற தவப்பேருக வந்தவனே! மடங்கி வருகின்ற அலைமோத நிமிர்ந்த கருணை வெள்ளம் கொழித்த பெருக்காறே! முதிர்ந்த சிவானந்த அமுதம் எழுகின்ற பரஞான வெளியில் வைக்கப் பெற்ற சுவை மிக்க தேனே! அறமானது முதிர்ந்த தவத்தோடு வளரும்படி வளர்கின்ற நற்ருயே! களிப்பையுடைய மயிலைச் செலுத்தி விண்ணுலகம் அடையும்படி முடுக்கிய கடவுளே! வேதக்கலையென்று சொல்லுகின்ற இசை பாடும் வரிவண்டு மொய்த்த மலர்ச் சோலையே! தெளிந்த தமிழ்

பயின்ற மதவலியே! சப்பாணி கொட்டுவாயாக. தினகரபுரியில் வந்து வீற்றிருக்கின்ற ஒப்பற்ற முதற் கடவுளே! சப்பாணி கொட்டுவாயாக.

கனியொடு சுவையமு தொழுகிய சொற்பயில் தத்தாய்வேள்
  கணையொடு பிணையென உலவு கடைக்கண் மடப்பாவாய்
நணைமலர் பொதுளிய எழிலி தழைத்த குழற்கோதாய்
  நளிர்புன மிசைவளர் கலபம் விரித்த மயிற்பேடே
எனவொரு குறமக னடிமுடி வைத்தனை முத்தேவாம்
  இறைவரு முறைமுறை பணிய இருக்கு முதற்றேவே
சினவிடை யவரருள் மழவிடை கொட்டுக சப்பாணி
  தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. 41

கனியுடன் சுவையையுடைய அமுதமும் ஒழுகுகின்ற சொற்களைப் பயிலும் கிளியே! மன்மதனது மலரம்புகளும் பெண் மானின் விழிகளுமென உலவுகின்ற கடைக்கண்களையுடைய இள நங்கையே! தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த மேகத்தைப் போலத் தழைத்த கூந்தலையுடைய கோதையே! குளிர்ந்த தினைப்புனத்திலே வளருகின்ற தோகை விரித்த மயிற்பெடையே! என்று குறமகளது அடியில் உனது முடியை வைத்தாய். நான்முகன், திருமால், உருத்திரன் ஆகிய மூன்று கடவுளரும் அவரவர்களுக்குரிய முறையில் வந்து பணிய இருக்கின்ற முதற் கடவுளே! சினத்தையுடைய இடப வாகனர் பெற்றுத் தந்த இளவேறே! சப்பாணி கொட்டுவாயாக. தினகரபுரியில் வந்து வீற்றிருக்கின்ற ஒப்பற்ற முதற் கடவுளே! சப்பாணி கொட்டுவாயாக.

(தொடரும்)

திருமுறை ஓதுக

ஆசையறுய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் அஞ்செழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய். — *சிவபோக சாரம்*

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 17. இதழ் 3-ன் தொடர்ச்சி

When Grace Descendeth.

109. இருவினை நேரொப்பில் இன்னருட்சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருவெனும் ஞானத்தால் தன் செயலற்றால்
திரிமலம் தீர்ந்து சிவன் அவன் ஆமே.

When the soul attaineth the state of neutrality
To deeds, good and evil,
Then doth divine Grace in Guru form descendeth,
Removeth attributes all,
Implanteth Gnana that is like a heavenly cool shade;
And then the soul thus devoid of egoity,
And rid of Impurities Three,
Shalt with Siva in union merge.

நல்வினை, தீவினை என்னும் இருவினையினையும் ஒன்றாக நோக்கும் நிலையை ஆன்மா அடையும்போது, திருவருள் சக்தியே குருவடிவாக வந்து, ஆன்மாவின் குணங்களைக் களைந்து, தேவதருபோன்று குளிர்ந்த ஞானமாம் சத்திநிபாதத்தால் யாவும் சிவன்செயலே என்னும் தன்னிலையறப் பெறுகின்றது. அந்நிலையில்மும்மலங்களும் அற்று ஆன்மாசிவத்தோடு ஒன்றுதல்பெறுகின்றது.

How to win the Lady of Grace

110. இரவும் பகலும் இல்லாத இடத்தே
குரவம் செய்கின்ற குழலியை உன்னி
அரவம் செய்யாமல் அவளுடன் சேரப்
பரிவொன்றில் ஆளும் பராபரை தானே.

In the Emptiness Vast where neither night nor day is
The Lady of long Tresses danceth in rapture;
Think of Her, make no sound
And in Silence woo Her;
In endearment Shall. SHE draw thee unto Her bosom.
And grant thee Her favours;
Verily, Verily, She is the Para Parai
The Power Supreme.

இரவுபகலில்லாத மோனவெளியில் நடனமாடுகின்ற அருட் சத்தியை நினைந்து, மோனநிலையிலமர்ந்து, அவளோடு சேர்ந்து, அன்புசெலுத்த அவள் உன்னை ஆட்கொள்ளுவாள்.

The Inner light of Grace

111. மாலைவிளக்கும் மதியமும் ஞாயிறும்
சாலைவிளக்கும் தனிச்சுடர் அண்ணல், உள
ஞானம் விளக்கிய நாதன், என் உள்புகுந்து
ஊனைவிளக்கி உடனிருந்தானே.

He is the Sun and the Moon
That dispelleth the dark;
He is the light on the path,
The Peerless Flame, The Supreme Lord;
The Master that illumined the Light within me;
He entered in me and lighted up the corporal body;
And then, aye, with me bided for ever and ever.

இருளினைப்போக்குகின்ற சந்திரசூரியர்களும், சிவஞான நெறியைக்காட்டுகின்ற ஒப்பற்ற ஒண்சுடருமாக இறைவன் அமைகின்றான். அவனே ஆன்மாவின் உள் ஞானத்தை ஒளி

பெறச்செய்கின்ற குருநாதன் அவன் என் உள்ளேபுகுந்து, ஊன் கலந்து உடம்பினைத் தூய்மைசெய்து, என்னுடனும் இரண்டறக் கலந்திருக்கின்றான்.

குறிப்பு:

வரி 1: *மாலைவிளக்கும்—இருளைப்போக்கும்; அல்லது மாலைநேரத்தில் ஒளிர்தரும் என்றுமதியின் மேல் ஏற்றினுமாகும்*

வரி 2: *சாலைவிளக்கும்—ஞானநெறியினைக்காட்டும்*

வரி 3: *உள் ஞானம் விளக்கிய—பதிஞானத்தைத் தெளியக்காட்டிய*

வரி 4: *ஊனை விளக்கிய—உடலைத்தூய்மைசெய்த; ''ஊனினைச்சுருக்கி உள்ளொளிபெருக்கி'' என்ற மணிவாசகர் அடியை நோக்குக.*

(தொடரும்)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

[ஏழாம் திருமுறை]

★ புதிய பதிப்பு ★

(விசுவாவசு ஆண்டு வைகாசிப் பூச வெளியீடு)

350 பக்கம் வெள்ளைத்தாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு, அவரைப்பற்றிய கல்லெழுத்துக் குறிப்புக்கள் ஆகியவை, அடங்கியது. தனிப்பிரதி அடக்க விலை ரூ. 1-30.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோர்க்கு 20% கழிவு.

(தபால் செலவு வேறு)

கிடைக்கும் இடங்கள்:—

1. **T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,**
நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம்.
(திருநெல்வேலி மாவட்டம்.)

2. **திரு. க. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், B. A.,**
தியாகராச விலாசம், 53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

வேலவன் குரல்

திரு. கு. பழநிசாமி அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கல்லூரி, அருள்நந்தி நகர்.

—oo○oo—

அலைவீசும் கடலோரம் அழகுமணற் குன்றம்
அழகாடும் திருக்கோயில் அருளாரும் மன்றம்
இலைவேலன் பெருங்கோயில் இதயமலர் ஏந்தி
இதுதருணம் அவன்பாத மலர்காண வாரீர்

நாமணக்கும் தமிழாலே நல்லவரம் வேண்டி
நன்னீரும் நறும்பூவும் கொண்டவனை நாடி
பூமணக்கும் அவனடியில் புரிந்ததனை இட்டு
பூரிக்கும் பூவுலகின் புகழ்காண வாரீர்

அருள்மலரும் திருவாயில் அழகுமலர் போல
அணிநகையே மலரவதில் அகமாயை அலற
மருள்மாயை மாய்க்கின்ற முகங்காண வாரீர்
மாணிக்கச் செம்மேனி மைந்தனவன் வீட்டில்

தித்திக்கச் செந்தேனில் செந்தமிழை வள்ளித்
திருமகளே முன்தருவாள் தேவர்களின் தங்கை
முத்திக்கே வித்தாகும் மொழிதருவாள் தென்னர்
முருகனவன் மாளிகையில் மோனஅலங் காரம்

நிலவுமந்த அமைதியங்கு நீ நிலைத்துக் கேட்டால்
நீணிலத்தின் மூலஒலி நிறைஒலியாய்க் கேட்கும்
குலவிவரும் அமைதியங்கு நீ குவிந்து நின்ருல்
கோலமயில் வேலவனின் குரல்ஒலியும் கேட்கும்

பால் நினைந்தூட்டும் தாய்

திரு. M. P. நாயகம் பிள்ளை அவர்கள்,
திண்டுக்கல்.

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

என்பது திருவாசகத்தில் பிடித்த பத்து 9-வது திருப்பாட்டு.

இந்த ஒரு திருப்பாட்டிலேயே மணிவாசகப் பெருந்தகையார் சைவ சித்தாந்தப் பேருண்மைகளைப் பொதிந்து வைத்திருக்கிருர் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. **பால் நினைந்தூட்டும் தாய் :** தாய்மார் மூவகையினராவர். குழந்தையின் பசியறிந்து அவ்வக் காலத்தில் தானே குழந்தையை எடுத்துப் பால் கொடுப்பவளை உத்தமத்தாய் எனவும், குழந்தை பால் வேண்டியழும் போது உடனே பாலூட்டும் தாயை மத்திமத் தாய் என்றும், குழந்தை பாலுக்கு அழுதும் உதாசீனமாய் வேறு வேலை செய்து கொண்டிருப்பவளை அதமத் தாய் என்றும் கூறலாம். சிவபெருமான் தமது குழந்தைகளாகிய ஜீவான்மாக்களைப் பக்குவமறிந்து ஆவன செய்வதைலால் அவன் உத்தமத் தாயாகின்ருன். எனினும் அத்தாயினும் சிவன் சிறந்தவன் என்பதை

'சித்தாந்தம்' மலர் 38, இதழ் 10-ல் வெளிவந்த இக்கட்டுரை ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்பெற்றுள்ளது.

2. **தாயினும் சாலப் பரிந்து:** என்பதால் உபதேசிக்கின்றார். அதாவது சிவபெருமான் உயிர்மீது கொண்ட கருணை ஓர் உத்தமத் தாயின் அன்பைவிடச் சிறந்தது என்கிறார். தாய்ப் பால் தாய்மை யடைந்த எந்தந் தாயிடமும் கிடைக்கும். உத்தமத் தாயே யாயினும் உடல் நிலை காரணமாகத் தம் மார்பில் பால் இல்லாது போனாலும் செவிலித் தாயை வைத்துக்கூடப் பாலூட்டி விடலாம். ஆனால் சிவனுடைய அருட்பால் என்றும் வற்றாது. அவனைத் தவிர வேறு எவராலும் அப் பாலூட்ட முடியாது. ஆகவே அது சாலச் சிறந்ததாயிற்று.

3. **பாவியேனுடைய:** இச் சொற்றொடரில் உயிர்கள் அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டப்பட்டவை. பாசத் தளைகளால் கட்டுப்பட்டவை. உணர்த்த உணரும் தன்மையன. அவை தம்மையும் அறியா; இறைவனையும் அறியா. ஐம்புல வேடரில் வளர்ந்து அயர்ந்தவை. தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப் பற்றி வருவனவுமான மூவகைத் துன்பத்தை இயல்பாகவே பெற்றவை. இவற்றை "தாபத்ரயம்" என்பர் வடநூலார். ஆணவமாகிய அஞ்ஞான இருளில் கண்கெட்ட குழவிபோல உழல்வன. ஆகையால் உயிர்களின் இயல்பைத் தன்மேலேற்றி பாவியேன் என்று இரக்கப் பண்பொடு பாடுகின்றார்.

4. **ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி:** இங்கு தாய்ப் பாலுக்கும் இறைவனின் அருட்பாலுக்குமுள்ள வித்தியாசத்சைக் காட்டுகின்றார். பசுங்குழவியாக இருக்கும் போது குழந்தைக்கு நல்லவை கெட்டவை என்ற அறிவு இல்லாது, உலகம் இத்தகையது என்று அறியாமலும் கிடக்கும். தாய் அதற்குப்பால் புகட்டி ஊனினை வளரச் செய்வதினால் உடல் கனத்து, கரணங்கள் தொழிற்பட்டுப் பிரபஞ்ச மாயையில் உழல ஏதுவாகின்றது. அதாவது தாயின்பால் ஊனினைப் பெருக்கி உள்ளொளியைச் சிறுக்க வைக்கின்றது. ஆனால் இறைவனின் அருட்பாலோ ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கச் செய்கின்றது. ஊன் உருகுதலானது பக்தி மேலீட்டால் "உடல் குழைய என்பெல்லாம் நெக்குருக" என்றபடி உண்டாகும் அனுபவமேயன்றி இறையன்பு மேற்கொண்டார்க்கு உடலைப்

பற்றிய சிந்தனையில்லா தொழிவதையும் குறிக்கும். இந்த வித்தியாசத்தினாலேயும் தாயினும் சாலப் பரிந்து என்றதும் பொருத்தமாகின்றது.

5. உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து : உலப்பிலா என்றால் என்றும் அழியாத என்பது பொருள். தெவிட்டாத என்றுகூடச் சொல்லலாம். உலகத்தில் இருக்கும் சகல உயிர்களும் தேடுவது சுகத்தையேதான். இந்த இன்பத் தேட்டையில்தான் எல்லா உயிர்களும் ஈடுபட்டிருக்கின்றன. இந்த இன்பம் இரண்டு விதம், ஒன்று உடலைப் பற்றியது; மற்றொன்று உயிரைப் பற்றியது. உடலைப் பற்றிய இன்பம் அழிவுடையது. வினைப் பயனை யூட்டுவது, பிறவிப் பெருங்கடலில் சிக்க வைப்பது. ஆனால் உயிரைப் பற்றிய இன்பமோ அழிவில்லாதது. வினையைக் களைவது; பிறவியை அறுப்பது; இது ஊன் உருகி உள்ளொளி பெருகும்போது உண்டாகும் ஆனந்தம். அதாவது "ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்ட நிலையில் உண்டாகும் ஆனந்தம்" இது தாய்ப் பாலால் உண்டாவதன்று. சிவபெருமானின் அருட் பாலுக்கே இத்தன்மை யுண்டு என்பதை ஈண்டு அறிவிக்கின்றார். தேன் என்றதால் எப்படித் தேனானது இனிமையாயிருப்பது மன்றி உடலுக்கு மருந்தாகவும் இருக்குமோ அதுபோல இறைவனின் அருள் உயிருக்கு இனிமையாயிருப்பது மன்றி மருந்தாகவும் இருப்பது என்பது குறிப்பு. சொரிந்து என்பது இடைவிடாது ஒழுகுவதைக் குறிக்கும். "தைலதாரை" என்பர் வடநூலார்.

6. புறம் புறம் திரிந்த செல்வம் : குழந்தையைக் காக்கும் பொருட்டு தாயானவள் அக்குழந்தையைப் பிரியாமல் அது கூடவே அங்குமிங்கும் சுற்றித் திரிவது போல இறைவன் உயிர்களைக் காக்கும் பொருட்டு கேவல, சகல சுத்த நிலைகளிலும் ஒன்றாய் இருந்து இயக்கியும், உடனாயிருந்து உதவியும் வேறாயிருந்து பராமரித்தும் வருகின்றான். முக்கியமாக சகல நிலையில் உயிர்களின் பிறப்புக்கள் தோறும் இறைவனும் உடனாகவேயிருந்து அவற்றின் வினைக்கீடாக தநு கரண புவன போகங்களை நல்கி, அவ்வினையைப் புசிப்பிக்கப் பிரபஞ்ச மாயையில் அழுத்தித்

தன் திரோபவ சக்தியால் அவன் அறிவைச் சற்று மறைத்து வினையை அனுபவிக்கச் செய்து சிறிது சிறிதாய் ஆன்மா பக்குவமடைந்து மலபரிபாகமும், இருவினையொப்பும் சேர்ந்துழி அதனிடம் அருள் சக்தியைப் பதியச்செய்து தானே குருநாதனாகத் தந்தருளி " அன்னிய மின்மையின் " அரன் கழல் செல்ல வாய்ப்பை அளிக்கின்றான். ஆகவே பிறவிகள் தோறும் வினைப்பயனை ஊட்டுவிக்கத் திரோபவ சக்தியாயும் பரிபாகம் அடைந்த ஆன்மாக்களுக்கு அருள் சக்தியாயும் மாறிப் புறம்புறம் திரிகின்றான் என்றார். இறைவனுடைய அளவற்ற ஆற்றலும் இணையற்ற கருணையும் இதனால் கூறப்பட்டது.

7. சிவபெருமானே: அவன் ஒருவனே முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான், பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன். அவன் ஒருவனே பரம்பொருள். "பிரமன் அரி என்றிருவர் தம்பேதைமையால் பரம் பரம் என்று இருந்த போது அவர்களின் மமதையையடக்க அடிமுடி மறைத்து நின்றவனல்லனோ?" "மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே நூலே நுழைவரியான் நுண்ணியன்" என்றார் பிறிதோரிடத்தில். அவன் சொற்பதங்கடந்த தொல்லோன்; ஆயினும் பக்தி வலையில் படுவோன். "அறுவகைச் சமயத்தறுவகையோர்க்கும் வீடுபேறாய் நின்றவன் சிவ பெருமானே" "யாதொரு தெய்வங் கொண்டீர். அத் தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" மற்றத் தெய்வங்கள் வேதனைப்படும், இறக்கும், பிறக்கும் மேல் வினையும் செய்யும்" என்ற சித்தியார் பாடல் நினைவுறத் தக்கது. அவனே நமது செல்வம்; சேமநிதி; எய்ப்பினில் வைப்பு அவனே உலக காரணன்; ஆதியந்தமிலாப் பரம்பொருள்; அவன் சிவன்; அவன் பெருமான்.

8. யானுனைத் தொடர்ந்து: தொடர்தல் என்றால் பின்பற்றுதல். அதாவது சிவன் வழிச் செல்லல். இறைபணி நிற்றல். ஆன்மாக்கள் மலபரிபாகமும், இருவினையொப்பும் அடைந்து சத்திநிபாதம் பதிய அதிகாரி பேதத்தை அனுசரித்து சரியாதி பாதம் நான்கினும் சோபான முறையில் மேலேறிச் சென்று "அயரா அன்பில் அரன் கழல் செல்லும்" இதுவே தொடர்தல் என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. தொடர்தலும் அடுத்து வரும் "சிக்கெனப் பிடித்தலும்" சாதனைகள் கூறியவாறு.

9. சிக்கெனப் பிடித்தேன்: வேறொரு பற்றின்றி அரன் கழலே பற்ருகப்பற்றுவதைச் சிக்கெனப்பிடித்தேன் என்ற சொற்ருெடரில் குறிப்பிடுகின்ருர். அவனைப் பற்றுதல் நம்பற்று விடுவதற்கு என்பதைத் திருக்குறளும் கூறுகிறது. ''பசுமரத்தாணி யறைந்தாற்போல் ஒரே நினைவாய் குரங்குப் பிடியாய், ''துடைக்கினும் போகேன்'' என்றபடி இறுகப், பற்றிக் கொள்ளல். ஆன்மா சார்ந்ததைச் சாரும் இயல்புடைத்து. பிரபஞ்சப் பற்றை யொழித்து இறைவனைப் பற்றிக் கொண்டால் ''அன்னியமின்மையின் அரன் கழல் செல்லும், ''இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும்'' அவன் கழலே சிந்தித்தல் என்பது சாதனை. சகல தேச கால அவஸ்தைகளிலும் அவனன்றி வேறுபுகல் இல்லையென்று பற்றிக்கொள்ளுதலே சிக்கெனப் பிடித்தல். இதில் இரண்டு கருத்துக்கள் உள. ஒன்றை விட்டே ஒன்றைப் பற்ற வேண்டுமாகையால், பிரபஞ்ச மாயையை ஒழித்தல் என்பதும் அவனைப் பற்றுதல் என்பதும் இரண்டு சாதனைகள் இதனில் அடங்கும்.

10. எங்கெழுந் தருள்வது இனியே: இதன் பொருள் ஆழ்ந்த சிந்தனைக் குரியது; இது தேனூறும் திருவாசகம். நான் பற்றிக் கொண்டேன். நான் உன்னை விட்டுப் போக மாட்டேன் என்று சொல்லாமல், நான் பற்றிக்கொண்டேன் நீ இனிமேல் என்னை விட்டுப் போக முடியாது என்று கூறும் துணிவை என் சொல்வது? சிவபோகம் கைவரப் பெற்ற உயிர் இறைவனேடு ஒன்றி விடுவதால் ஒருவரை ஒருவர் விட்டகலாத கலப்பு ஏற்பட்டு விடுகின்றது. என்ற சுத்தாத்வைத சைவ சித்தாந்தக் கருத்தை இவ்வளவு அழகாய்ச் சித்தரிக்கின்ருர் மணிவாசகர். '' அவனே தானுகியநெறி '', '' தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் '' என்று இப்பாட்டில் வருவது ஒரு சிறப்பு. அதன் விளைவு சிவபோகம். பிடித்த பத்தின் ஏனைய பாடல்களில் வேறு விதமாகக் கூறியிருப்பதைப் பார்க்க.

ஆகவே இத் திருப்பாட்டில் சுத்தாத்வைத சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஒரு சிறு சிமிழில் அடைப்பது போல அடிகள் அமைத்திருப்பது இப்பாட்டின் தனிச் சிறப்பு எனலாம். பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைகளையும் இதில்

காணலாம். பசு பாசத்தால் கட்டுண்டு உழல்வதைப் பாவியேன் என்ற சொல்லாலும் உயிர்களுக்கு மலபரிபாகமும் வரும் பொருட்டு தநுகரண புவன போகங்களை நல்கி வினையைப் புசிக்கச் செய்து பரிபக்குவம் வந்துழி அவனே அருள் பாலிப்பான் என்ற பதி இலக்கணத்தை "புறம் புறம் திரிந்த செல்வம்" என்றும், சிவபெருமான் என்றும், ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி என்றும் கூறுவதாலும், தொடர்ந்து என்றதால் உயிர் செய்ய வேண்டிய முயற்சியையும், எங்கெழுந்தருளுவதினியே என்பதால் சிவாத்துவித சாயுச்சிய நிலையையும் கூறி, இறைவனைப் பால் நினைந்தூட்டும் உத்தமத் தாயை விடச் சிறந்தவராகக் காட்டுகின்றார். ஏனெனில் தாயார் பால் கொடுக்கும் சமயம் தவிர வேறு சமயங்களில் வேறு வேலையில் ஈடுபட்டிருக்கக்கூடும். ஆனால் இறைவனோ ஒன்றாய் உடனாய் வேறாய் எப்பிறப்பும் தப்பாமல் கூடவேயிருந்து இயக்கியும், உதவியும், காத்தும் வருவதால் அவன் தாயைவிடச் சிறந்தவனேதான். " தாயிற் சிறந்த தயாவான தத்துவனே " என்றார் பிறிதோரிடத்திலும். இறைவனின் அளவற்ற ஆற்றலையும் இணையற்ற கருணையையும், உயிர்களின் கதியற்ற நிலைமையையும், பாசங்களின் கடுமையான வன்மையையும் அவற்றை விலக்க அவன் அருளும் தன் முயற்சியும் உயிர்களுக்கு வேண்டும் என்பதையும் பரிபக்குவம் அறிந்து இறைவனே அருளி தன்னுடன் ஐக்கியப் படுத்திக் கொள்வான் என்பதையும் " கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தின " மாதிரி இப்பாடலில் அடிகள் நமக்கு அருள் விநியோகம் செய்கின்றார்.

மாணிக்க வாசகர் திருவடிகளே சரணம்!

ஒரு வாசகம்

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என் றுணர்.

பித்தவுலகில் பெருமக்கள்

சித்தாந்தச்செல்வர்:
திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தன் அவர்கள்,
திருவண்ணாமலை

[மலர் 17. இதழ் 2-ன் தொடர்ச்சி]

சித்த யோகமும் சீருறப் பொலியும்!
பலதவச் செல்வர் பல்கி விளங்கின்
மலர்தலை யுலகில் மல்கிரு ளகலும்
கலைவளர் நோக்கில் கண்ணோக்கு கொள்ளினும்
நிலைவளர் பாங்கில் நியாய முணர்மின்!

வாழ்க்கை யென்பது வளமார் ஊற்றே!
எனினு மதன்பால் ஏற்றமிகு கொள்ளின்,
வீழ்க்கை கொள்வர்; வீணி லுழல்வர்!
மெத்தையிற் றுயில்வர்; மேன்மை யுணரார்;
உத்தியை யுணர்வர்; உயர்வை யோம்பார்;

பாலையுண்பர்; பருவுட லோம்புவர்;
காலை தூங்குவர்; களைப்பை யேற்றுவர்;
நண்பகல் தூங்கி, நடுவனை யழைப்பர்,
மாலையிற் றூங்கி மனைவியைக் கெடுப்பர்;
ஏட்டி லடங்கா வெல்லையில் பாவங்கள்,

நாட்டில் புரிவர், நன்மக்க ளென்பர்;
காட்டி லுள்ள கடுவிலங் கன்ன
ஆடித் திரிவர்; அன்புள மற்றோர்,
மாற்றார் செய்கையில் மனத்தை யிறுத்துவர்,
உற்றார், பெற்றார், உறவின, ரறியார்,

கற்றா ரென்னின் கண்ணியங் காட்டார்,
நல்லோ ரெனப்புகல நாட்கள் செல்லும்;
வல்லோ ரென்னின் வன்மை வேண்டும்,
நல்ல செயல்கள் நன்மையில் வளர,
எல்லாம் வல்ல வெம்மான் பாதம்,

சொல்லால் வழுத்தின் சுகத்தைப் பெறுவர்.
வாழ்வும் தாழ்வும் வருவது எவரால்?
காழ்ப்பு மேய்ப்பும் கழிவ தெவரால்?
அயர்வும் சிறுமையு மகல்வது எவரால்?
உயர்வும் பெருமையு மோங்குவ தெவரால்?

பரம்பொரு ளாமவன் பரம னருளாலே!
நித்த முண்டு, நிம்மதி கொண்டு,
சித்தம் தெளியா சிதலை யன்ன,
பாழ்த்த வாழ்வால் பெறும்பய னென்னே!
வீட்டைக் கட்டுவார்; வீணி லுழல்வர்;

காட்டை யழிப்பர்; கழனி யாக்குவர்;
ஆற்றைத் திருப்புவர்; ஆம் வினைபுரியார்;
ஊற்றைத் தோண்டுவர்; ஊரைக் கெடுப்பர்;
குணம்து குலைப்பர்; குற்றம் பெருக்குவர்;
பணத்தைப் பெருக்குவர்; பண்பை யோட்டுவர்,

மக்களைத் தேடுவர் மாண்பை மாய்ப்பர்,
பக்கந் தோறும் பலத்தைத் தேடுவர்,
நீதியைக் குலைப்பர்; நியாய மழிப்பர்;
அருளை விரும்பார்; ஆக்கந் தேடார்;
மருளை விரும்புவர்; மறத்தைப் போற்றுவர்,

இம்மையிற் செல்வ மினிதுபெற் றேமென,
தம்மை யறியா தயவிலா வாழ்வில்,
நித்த வாழ்வு நிலைபெற்ற தென்று,
மெத்த கேடுகள் மண்ணில் பெறுவர்,
உற்ற காரணம் உறுதியில் உணர்மின்!

WOMAN AND SPIRITUALITY

Brahmacharini Vidyaa.

Man and woman are like the two wheels of the cart in the pilgrimage of life. If one is injured, the other is affected as well. They are the two integral and essential components of human society and so they must understand, co-operate and fulfil each other. Each one is a complement to the other and certainly not a rival. Each has a definite, distinct part to play in the drama of life. There is no justification for one part to exploit, bully, discard, reject or neglect the other; on the other hand, there is an unavoidable necessity for mutual harmony, adjustment, co-operation and co-existence if human life on earth is to be happy and fulfil itself. In this there is no question of slavery or dependence, superiority or inferiority, but only the question of a sort of division of labour, as ordained by the Divine, Prakriti or Nature itself.

Now, it is accepted by all the civilised nations that man and woman are equal. In India, this equality was recognised right from the Vedic times. It was already here even before history began to be written. In the Vedic and post-Vedic times, Indian women held a very exalted and respectable position. Many Hymns in the Rig Veda have women as their Rishis or Seers. It is stated in Manu Smriti: "Yatra naaryaastu poojyante ramante tattra Devataah": where women are honoured, even the Gods are pleased

* Reproduced with the kind permission of author of "Kaivalya Sudha" - Feb. 1966.

there. The women of Bharat had for centuries such a revered position that many of them found prominent mention in the Vedas, puranas and other scriptural books. There were women scholars and saints, poets, philosophers and artists. Gargi, Maitreyi, Chudala are some of the renowned women who could debate freely with the Rishis and hold their own in any august assembly of saints and sages, kings or commoners. Such facts should make us, Indian women, feel happy, proud, elevated, self-confident and courageous. Now that India is free, can we not become like that again? Can we not revive that ancient glory and purity? We, women, have to play our part even now in this nuclear age.

But somehow, due to historic causes in the last 1000 years or so, the status of Indian women has woefully deteriorated. She has lost her once exalted position and influence in the country. She has been just a puppet, a lifeless doll, in the hands of men. Man has crushed and curbed the individuality, honour and freedom of women, forced her to serve his base needs and kept her in the mire of slavery, ignorance and suffering to achieve his own selfish ends. He has tried in many clever and unscrupulous ways so far to make woman his possession, just an object of his enjoyment, and he has largely succeeded also in his attempts to do so. But the most deplorable and pitiable part of it is that woman herself is not able to comprehend her plight and prevent her own fall, for, she is immersed in such a deep ocean of ignorance and does not realise her own dignity. How can she protest or fight against the evils that have victimised her? She has meekly submitted herself to this position. Though man has been responsible for the downfall of

woman, he himself–be it said to India's glory–has tried to improve her status and win her freedom today. In this connection, we cannot but remember the signal service rendered by leaders like Raja Ram Mohan Roy, Swami Vivekananda, Mahatma Gandhi and others. We must be ever grateful to the contribution of these great souls, who have improved considerably the status of women in India.

Now, our women have an equal opportunity with men in all fields–education, politics, science, arts. This equality she has gained after a long period of suffering and struggle. Still there is much room for improvement. Legal rights and safeguards granted by the letter of the constitution have to be put into practice and enforced if they must be made realities. Our women still suffer many handicaps, especially in social life. Husbands and heads of joint families still continue to disregard with impunity women's equal rights. Double standards of morality are still in vogue in society, leading to deep distress and violence to self-respect. The remedy lies in the spread of education among women, more than in legislation. Woman has to become self-conscious of her rights and honour. Women must refuse to be treated as decorated dolls or chattels who could be dominated or dictated to at will by men, regardless of their spiritual role in life. Spirit can never be conquered once it becomes self-conscious. It can rise above all cramping environments and assert its strength and freedom. In this connection, the lives of Sita and Savitri in ancient times and of Meera, Rani of Jhansi and Akka Mahadevi of the middle ages, who are all equally revered by men and women, may be cited as illustrious examples that have vindicated woman's status and

glory. They prove that spirituality is the heritage of women as much as it is that of men. Both have an equal and unique part to play in the progress of culture and civilisation, in contributing to the welfare and happiness of humanity.

There is certainly some room for gratification that woman's social status is slowly rising. There is also a wider recognition of the value of woman's education. But the advance is confined to the material plane. Better opportunities must be provided for women to get religious and spiritual education and instruction. It is a great pity that even learned pundits and leaders of society are still in the grips of the old customs and superstition and so deny women their due place on the highest plane of life. They do not allow women to learn the Vedas and the Upanishads, not to speak of teaching the scriptures. These things must go. Woman must have as easy access to the treasures of the sacred scriptures as man. A woman taking to the spiritual path should be encouraged in all ways and granted the necessary facilities. If the masses have to improve, dedicated women of strength, purity, culture, education and well-centred spirituality should come out and serve society with the motto: Atmano mokshartham jagaddhitaya cha-for one's own liberation and for service of the world.

Woman is not just a person harnessed to home and hearth. She, too, has her social and national responsibilities and duties to discharge. She is now subject to considerable confusion and tension due to the changing conditions in life. At this critical juncture, our women must be properly guided, if our ancient culture and Dharma is to live. A homely

proverb says: "To educate a man is to educate just a single person, but to educate a woman is to educate the whole family." Unlike man, who is inevitably caught up in the vortex of the struggle for worldly existence, woman is free to devote her attention to the preservation of our culture and spirituality. Let women, therefore, avail themselves of this advantage and dedicate themselves to the cause of the glorious heritage of India.

Be strong in woe and humble in weal. Do not lose balance either in pain or in pleasure. Do not befriend one too much nor show unfriendliness to any. Both are serious faults and therefore seek the golden mean.

– *Valmiki*.

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

அகத்தியர் தேவாரத்திரட்டு

புதிய பதிப்பு

விசுவாவசு ஆண்டு ஆவணி மூல வெளியீடு

99+19=118 பக்கம் வெள்ளைத்தாள்

அகத்தியர் தேவாரத்திரட்டின் வரலாறு, குறிப்புரைகள் ஆகியவை, அடங்கியது,

தனிப் பிரதி அடக்க விலை ரூ. 0-36.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

தபால் கட்டணம் வேறு.

கிடைக்குமிடங்கள்:—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்
ஸ்ரீவைகுண்டம். *(திருநெல்வேலி ஜில்லா)*
2. "தியாகராச விலாசம்"
பிள்ளையார் கோயில் தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி

Tiruttondattogai.

திருத்தொண்டத்தொகை: பண்: கொல்லிக்கௌவாணம்

திருவாரூர்

'திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.'

I am the slave unto the slaves of St. Tirunavukkarasar, who was the embodiment of Siva Bhakti. I serve the devotees of Kulachirai Nayanar. I am the servant of Perumizhalaikkurumbar, Karaikkal Ammaiyar, who longed to have the form of a ghost, and Appudi Nayanar and St. Neela Nakkar of Sattha mangai.

And slave unto the slaves of Nami Nandi am I, the servant of the Lord at Arur.

(To be continued)

எண்ணலங்காரம்

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M. A., B. O. L.,
திருப்பனந்தாள்.

குறிப்பில் தருமொழி

சொற்கள் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பொருளைத் தருவன ஆகும். 'ஊர் உறங்கியது' என்பதில் ஊர் என்பது மக்களைக் குறிக்கும். இதனை இடவாகுபெயர் என்று கூறுவர். இங்ஙனமே ஆகுபெயருள் பலவகை உண்டு.

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மர் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!"

என்ற இடத்தில் நூற்றுவர் என்பது துரியோதனனை முதலாகக் கொண்ட நூறுபேரையும், ஐவர் என்பது தருமனை முதலாகக் கொண்ட ஐந்து பேரையும் குறிக்கும். இதனைத் தொகைக் குறிப்பு என்பர். இங்ஙனம் குறிப்பால் பிறபொருள்களை உணர்த்தும் மொழிகளைக் குறிப்புமொழி என்று கூறுவர். இவற்றை,

"ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே
முதல்தொகை குறிப்போடு இன்னபிறவும்
குறிப்பில் தருமொழி அல்லன வெளிப்படை"

என்ற சூத்திரத்துள் நன்னூலார் கூறியுள்ளார்.

பிற குறிப்பு

பல்வேறு வகைகளில் கொடுக்கப்பட்ட சொற்களால் பொருளை உணர்ந்துகொள்ளுமாறு அமைப்பது பிறகுறிப்பு

என்னலாம். பிறகுறிப்புக்கு உதாரணமாகப், புறப்பொருள் வெண்பாமாலையில் – பாடாண் திணையில் – ஓம்படை என்னும் துறைக்குக் கொடுக்கப்பட்ட பின்வரும் பாடல் இலக்கண உரை யாசிரியர்களால் தரப்பெற்றுள்ளது :—

"ஒன்றில் இரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களம்கொண்ட வேல்வேந்தே—சென்றுலாம்
ஆழ்கடல்சூழ் வையகத்துள் ஐந்துவென்று ஆறுஅகற்றி
ஏழ்கடிந்து இன்புற் றிரு."

இதில் ஒன்றுமுதல் ஏழுவரை உள்ள எண்கள் பயன் படுத்தப் பெற்றுள்ளன. இவ்வெண்கள் ஒவ்வொன்றும் குறிப்பாகப் பல பொருள்களை அறிவிப்பனவாகும். இப்பாடலில் கண்ட எண் களின் விளக்கம் பின்வருமாறு*:—

ஒன்று — ஞானம்.
இரண்டு — காரண, காரியங்கள்.
மூன்று — நட்பு, பகை, நொதுமல்.
நான்கு — யானை, தேர், குதிரை, காலாள்.
ஐந்து — மெய், வாய், கண், மூக்கு, செவி.
ஆறு — நட்பு, பகை, செலவு, நல்லிருக்கை, கூடின
— ரைப் பிரித்தல், கூட்டல்.
ஏழு — வேட்டம், கடுஞ்சொல், மிகுதண்டம், சூது,
மிகுபொருளீட்டம், கள், மிகுகாமம்.

இவ்வெண்களை வேறுகூறுவாரும் உளர். அவை வருமாறு:-

ஒன்று — ஆன்மா.
இரண்டு — புண்ணியம், பாபம்.
மூன்று — காமம், வெகுளி, மயக்கம்.
நான்கு — சாம, தான, பேத, தண்டம்.
ஐந்து — சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
ஆறு — படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

எண்ணடுக்கு

மேற்கண்டவாறு எண்கள் தொகைக் குறிப்பான் பொருளை உணர்த்தாது, ஒன்றுமுதல் பதினெட்டு ஈறாக அடுக்கி, வெண்பா

* புறப்பொருள் வெண்பாமாலை உரை, பாடாண் – 37.

யாப்பில் காளமேகப்புலவர் பாடிய பாட்டொன்று தனிப்பாடல் திரட்டில் காணப்படுகிறது. அஃது பின்வருமாறு:-

“ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு ஏழெட்டு
ஒன்பது பத்துப் பதினொன் றுபன்னி
ரண்டுபதின் மூன்றுபதி நான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழுபதி னெட்டு.”

இப்பாடலில் முதல்வரியில் ஐந்தாறு ஏழெட்டு என்ற இரு இடங்களிலும் ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடா’மை குறையே ஆகும்.

எண்ணலங்காரம்

மேலே கண்டவாறு எண்கள் பிற குறிப்பான் பிறபொருளை உணர்த்துதல் இன்பம் பயப்பதாக இருக்க, எண்களை வரிசையாக அடுக்கி அவற்றோடு அவ்வெண்கள் குறிக்கும் பொருளையும் இணைத்துப் பாடும் பழக்கம் காணப்படுகிறது. சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கு விநாயகர்துதியாக அமைந்த பின்வரும் பாடல் இவ்வழகு வாய்ந்ததாக இருக்கிறது:-

“ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தரும்ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுஒட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றோ,என்னச் செய்யும் தேவே!”

இப்பாடலில் நால்வாய் என்பதிலுள்ள நான்கு என்பதும், ஆறு என்பதும் எண்கள் போன்றிருப்பினும் எண்களைக் குறிக்கவில்லை.

இப்பாடலில் கண்ட அணியை எண்ணலங்காரம் என்று சிவ ஞான முனிவர் சிற்றுரையில் கூறியுள்ளார்.

சம்பந்தர் தேவாரத்தில்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருவீழிமிழலைத் திருப்பதிகத்துப் பாடலொன்றிலும் இவ்வெண்ணலங்காரம் பொருந்தியிருத்தலைக் காணலாம். அப்பாடல்,

"ஈருய்முதல் ஒன்ருய்இரு பெண்ஆண்குண மூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தாளுய்
வேருய்உட ளுனுன்இடம் வீழிம்மிழ லையே"

என்பது. உலகிற்கு இறுதியைச் செய்யும் முதல்வன் அந்தமும் ஆதியும் ஆகும்போது வேருய் நிற்கிருன்; உலகியல் பொருள் களோடு ஒன்ருய் நிற்கிருன்; உயிர்களோடு உடனுய் நிற்கிருன். இச்செய்திகளைச் சம்பந்தர் மேற்குறித்த பாடலில் அருளிச் செய் துள்ளார். இறைவன் ஒன்ருய் நின்று உலகியல் பொருள்களை இயக்கும் திறத்தைக் கூறவந்த பகுதியே 'ஒன்ருய்' என்பது முதல் 'எட்டுத்திசை தாளுய்' என்பது வரை ஆகும். இதனுள்,

ஒன்று	—	ஒன்ருய் இருந்து உலகியற் பொருள் களோடு ஒன்ருய் நிற்பது.
இரண்டு	—	ஆண், பெண்.
மூன்று (குணம்)	—	சத்துவம், இராஜசம், தாமசம்.
நான்கு (மறை)	—	இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.
ஐந்து (பூதம்)	—	நிலம், நீர், தீ, வளி, ஆகாயம்.
ஆறு (சுவை)	—	துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, புளிப்பு, இனிப்பு.
ஏழு (ஓசை)	—	குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.
எட்டு	—	எட்டுத்திசை.

திருமூலர் திருமந்திரத்தில்

எண்ணலங்காரம் பொருந்திய பாட்டொன்று திருமந்திரத் தின் முதற் பாடலாகத் திகழ்கின்றது. அப்பாடல் பின்வருமாறு:-

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றவன் மூன்றனுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே."

எண்விளக்கம்*:-

ஒன்று — இறைவன் ஒருவனே.
இரண்டு — இறைவனும் அவனது இன்னருளாகிய சக்தியும்.

* "திருமந்திரக்கருத்து" — ச. தண்டபாணிதேசிகர் — திருவாவடு துறை யாதீனப்பதிப்பு.

மூன்று — அயன், அரி, அரன் என்னும் இம்மூன்றுள்ளும் நிற்கும் நிலை.

நான்கு — உலகாதீதன், உலககாரணன், உலகிற்கு அந்தர் யாமி (உயிராய் நிற்றல்), உலகருபி.

ஐந்து — ஐம்பொறிகள்.

ஆறு — ஆறு ஆதாரங்களாகவும்[1], அவ்வாதாரங்கட்குரிய தேவதைகளாகவும்[2], ஆறத்துவாக்களாகவும்[3] விரிந்தவன்.

ஏழு — ஏழாவதாகிய துவாத சாந்தத்தில்[4] இருப்பவன்.

எட்டு — அட்டமூர்த்தியாக[5] உணரப்பெற்று அவற்றுள்ளே கலந்திருப்பவன்.

1 ஆறு ஆதாரங்கள்	2 தேவதைகள்	3 ஆறு அத்துவாக்கள்
மூலாதாரம்	கணபதி	மந்திரம்
சுவாதிட்டானம்	பிரமன்	பதம்
மணிபூரகம்	திருமால்	வன்னம்
அனுகதம்	உருத்திரன்	புவனம்
விசுத்தி	மகேசுவரன்	தத்துவம்
ஆஞ்ஞை	சதாசிவன்	கலை

4. துவாதசாந்தம் — பிரமரந்திரத்திற்கு மேலிருப்பது அங்கு ஆயிரத்தெட்டிதழ்க் கமலம் உள்ளதாகத் தியானிக்கப் படுவது; பரசிவத்தை அதிதேவதையாகப் பெற்று விளங்குவது.

5. அட்டமூர்த்தி—நிலன், நீர், தீ, இயமானன், காற்று, திங்கள், ஞாயிறு, ஆகாசம்.

தஞ்சை வாணன் கோவையில்

கோவைப் பிரபந்தங்களில் வெகுவாகப் பயிலப்படுவது தஞ்சைவாணன் கோவை என்னும் பிரபந்தமாகும். இதனை எழுதியவர் பொய்யாமொழிப் புலவர். இந்நூல் ஏறத்தாழ 750 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதெனக் கருதப்படுகிறது. இந்நூலுள் 341-ஆவது செய்யுள், 'ஆற்றிடை முக்கோல் பகவரை வினுதல்' என்ற துறையில் அமைந்துள்ளது. அது பின்வருமாறு:-

''ஒருவெண் குடையிரு நீழல்முக் கோல்கொண் டொழுக்கத்தினுல்
அருவெங் களரியைந் தாறுசெல் வீரரு ளீரெழுபார்

மருவெண் திசைபுகழ் வாணன்தென் மாறையென் வஞ்சியன்னாள்
பொருவெஞ் சுடரிலை வேலொரு காளைபின் போயினளே.”

இதில் ஒன்றுமுதல் எட்டுவரை எண்கள் பயின்றுள்ளன. இரண்டைக் குறிக்கும் ‘இரு’ என்பது பெருமை என்ற பொருளிலும், ‘களரியைந் தாறுசெல்வீர்’ என்ற இடத்தில் ஐந்து ஆறு என்ற எண்கள் குறிப்பாக வேறு பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கல்லெழுத்தில்

கி. பி. 1216 முதல் கி. பி. 1238 வரை பாண்டிய அரசனாகத் திகழ்ந்த முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்ற அரசனது மெய்க்கீர்த்தி ஒன்றில் எண்ணலங்காரம் பொருந்திய வரிகள் காணப்படுகின்றன. அவ்வரிகள்,

“ஒருகுடை நீழல் இருநிலம் குளிர
முவகைத் தமிழும் முறைமையில் விளங்க
நால்வகை வேதமும் நவின்றுடன் வளர
ஐவகை வேள்வியும் செய்வினை யியற்ற
அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ
எழுவகைப் பாடலும் இயலுடன் பரவ
எண்டிசை யளவும் சக்கரம் செல்ல”

என்பன. இவ்வரிகளில் உள்ள எண்களின் விளக்கம் வருமாறு:-

இருநிலம்	—	பாண்டிய நாடும் சோழ நாடும்.
முவகைத் தமிழ்	—	இயல், இசை, நாடகம்.
நால்வகைவேதம்	—	இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.
ஐவகைவேள்வி	—	பிரமவேள்வி (வேதமோதுதல்), தேவ வேள்வி(யாகம்செய்தல்),மானிடவேள்வி (விருந்தோம்பல்),தென்புலத்தார்வேள்வி (தென்புலத்தார் பொருட்டு நீர்க்கடன் முதலியன செய்தல்), பூதவேள்வி (பிராணிகட்குப் பலியுணவு கொடுத்தல்).
அறுவகைச்சமயம்	—	சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம். புறப்புறம்,

புறம், அகப்புறம், அகம் எனும் நான்க னுள் தனித்தனி அறுவகைப்பட்ட சமயங்களுள் அகச்சமயம் ஆறு என்னலும் ஆம்.

எழுவகைப் பாடல் — ஏழிசைபொருந்தியபாடல் (ஏழிசைகுரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன).

ஒன்றுகொலாம்

பொங்குகடல் கன்மிதப்பில் போந்தேறிய பெருந்தகையாளராகிய திருநாவுக்கரசர், திருவையாற்றுக்குச் செல்லும் வழியில் திருநாவுக்கரசர் என்ற திருநாமம் ஒரு தண்ணீர்ப்பந்தர் முழுவதும் எழுதியிருப்பதைக் கண்டார். ஆங்கு அப்பூதி அடிகளாரின் அன்பின் திறத்தை வினவி அறிந்து அப்பூதி அடிகளாரின் அகத்தை அண்மினுர். அப்பூதியடிகளும் வந்தவர் திருநாவுக்கரசர் என்பதை உசாவி அறிந்தார். அப்பூதியடிகளின் வேண்டுகோட்கிணங்கித் திருநாவுக்கரசர் அமுதுசெய இசைந்தார். அப்பூதியடிகளாரின் மூத்தமகன் வாழைக்குருத்து அரிந்துவரச்சென்ற பொழுது அராத்தீண்டப்பெற்று மயங்கி வீழ்ந்தான். இருமுது குரவரும் தம்மூத்த புதல்வனின் உடலை மறைத்துவைத்துத் தடுமாற்றம் இலராகித் திருநாவுக்கரசரை அமுதுசெய வேண்டினர். இறைவன் திருவருளால், திருநாவுக்கரசர் அங்கு நடந்ததை அறிந்தார். அராத்தீண்டிய மகன் உயிர்பெறப் பதிகம் பாடினுர். அப்பதிகம் 'ஒன்றுகொலாம்' என்று துவங்குவது. அப்பதிகத்தில் ஒன்றுமுதல் பத்துப்பாடல்களில் ஒன்றுமுதல் பத்து எண்கள் தொகைக்குறிப்பாகவும் எண்ணலங்காரம் பொருந்தவும் சொல்லப்பட்டுள்ளன. விரிவைத் தருமையாதீன வெளியீடாகிய நாலாந்திருமுறையில் காண்க.

எழுகூற்றிருக்கை

மாறனலங்காரம் என்றேர் அணியிலக்கணம் 16-ஆம் நூற்றுண்டின் இறுதியில் எழுதப்பட்டது. இதனை இயற்றியவர் பரம பாகவதராகிய திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இந்நூலுக்குச் சிறந்த விருத்தியுரை உண்டு. அதனைச் செய்தவர் காரிரத்ன கவிராயர். இம்மாறனலங்காரம், சொல்லணி இயலில்-இறுதி

யில், எழுகூற்றிருக்கை என்ற ஒரு அணி கூறப்பட்டுள்ளது. செய்யுளிலே ஒன்று என்னும் எண் முதற்கொண்டு ஏழு எண் வரையிலேயும் ஏற்றியும் இறக்கியும் பதின்மூன்குதடவை எண்ணலங்காரம் பொருந்த எண்ணி முடிப்பது எழுகூற்றிருக்கை எனப்படும். அதாவது, 1; 1–2–1; 1–2–3–2–1; 1–2–3–4–3–2–1; 1–2 3–4–5–4–3–2–1; 1–2–3–4-5–6–5–4–3–2–1; 1–2–3–4–5–6 7–6–5–4–3–2–1; என்ற முறையில் வருவது.

இதனை இரதபந்தத்தில் அமைப்பதும் உண்டு. அவ்வாறு அமைக்கப்பட்ட முறையை மாறனலங்கார உரையிலும், சாமிநாத பண்டிதர் அவர்களால் அச்சிடப்பெற்ற அடங்கல்முறைப் பதிப்பிலும் காணலாம்.

ஞானசம்பந்தர் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் திருஎழுகூற்றிருக்கையாக ஒரு பதிகத்தை அருளியுள்ளார்.

நக்கீரதேவநாயனுர் பதினெராந் திருமுறையில் அருளியுள்ள திருஎழுகூற்றிருக்கையும் இவ்வலங்காரம் கொண்டதேயாம்.

முடிப்புரை

எண்ணலங்காரம் பொருந்திய பாடல்கள் இன்னும் எத்தனையோ உள. முன்னர்க் கூறிய 'ஈராய்முத லொன்ருய்' என்ற பாடலோடு 'எண்ணிடை யொன்றினர்', 'மேவி லொன்றர்' 'மணந்திகழ் திசைகளெட்டும்' என்ற ஞானசம்பந்தர் தேவாரங்களும் எண்ணலங்காரம் பொருந்தியவையே! இவற்றுள் எண்ணிடை யொன்றினர்' என்ற பாடலுள் ஒன்று முதல் பத்துவரை எண்கண் உள்ளன. மணந்திகழ் திசைகளெட்டும்' என்பதில் எட்டு முதல் ஒன்றுவரை எண்கள் இறங்குமுகமாகக் கூறப்பட்டுள்ளன.

எண்கள் பயிலப்பட்டுள்ள இவ்வழகினை எண்ணலங்காரம் என்று அணியிலக்கண நூலாரோ அதன் உரையாசிரியர்களோ கூறியதாகத் தெரியவில்லை. ஆனல் சிவஞான சித்தியார்க்குச் சிற்றுரை யாத்த மாதவச் சிவஞானயோகிகளே 'ஒருகோட்டன்' என்ற திருப்பாடலுரையில் 'இஃது எண்ணலங்காரம்' என்று குறித்துள்ளார். எனவே இவ்வழகுக்குப் பெயரிட்டவர் சிவஞான முனிவர் என்றே கருதலாம்.

THE RUFUS-EYED COLA

Professor E. S. Varadharaja Iyer.

Once there existed on the bank of the river Ponni alias Cauvery which flows through and fertilises the cola Nadu, a holy tank by name Chandra Tirtha and on its side there was an extensive forest. In that Charming Sylvan grove there was a white Jambu tree (Eugenia Jambolana), where Siva whose twin-feet were once the object of search for Vishnu, cropped up in the form of a Swayambu linga. A white elephant celebrated for its austerities, used to bathe the blue-necked God, in fact, as blue as the blue lily, with the water it carried in his proboscis and adorn it with flower-wreaths. The place, consequent on this act of the elephant, was named Tiruvanaikka-literally the grove, where the elephant worshipped God.

Here a spider endowed with some knowledge, wove round the head of the deity a Canopy with the thread that flowed from its mouth, with intent to prevent the leaves of the forest falling on it. When the elephant, which used to worship the deity, saw the Canopy, it destroyed it, exclaiming "Improper and unholy". The next day, the spider, which witnessed the act, wove a fresh one, which too was destroyed the following day. The spider thereon got infuriated and muttering "What business has this quadruped to destroy the Canopy of thread, which I wove, to shelter

the deity from the withering leaves" entered the trunk of the animal with the result, it dropped down dead, dashing its trunk on the floor in agony. While it so dashed, the spider too died. Thereon Siva showered boons on the faithful elephant and directed the spider to be born in the cola line.

Now, King Subhadeva, who came of the time-honoured Cola line, used to worship the flower-like feet of the cosmic dancer of Thillai; The Chaste queen Kamalavati who was without a heir for long, prayed for an offspring and by the grace of the Lord, the above spider took shape in the Lady's womb.

When the exact time arrived for being brought to bed, some old seers said, that, if the child be born after the lapse of a Naligai, it will hold sway over the seven worlds. The queen on hearing the above words, requested those present to place her legs up in a topsy-turvy way. They obeyed and the child, owing perhaps to the unusual posture, came out with red eyes. The queen on seeing it, exclaimed 'My red eyed darling' and breathed her last. The king brought the infant up, who was as dear to him as his own atma, crowned him renouncing the world in due course and attained salvation.

The ruling cola took upon himself the sacred act of building temples for the lord of Kailas. Fully conscious of his previous birth as a spider, he erected a temple at Tiruvanaika round the aurora Jambu tree, under whose benign umbrage, Lord Siva made his original appearance as the Appu Lingam. Nay, the monarch, who was the ancestor of Anabaya erected many a shrine for the destroyer of Tiripura, and

endowed them with immense wealth and all the necessaries for its continuous Propitiation. He then went to Thillai. While he stayed there, offering daily worship to the Lord who was seated in the Ponnambalam or the golden hall, he built many temples for Siva. After a long and illustrious reign, he attained the final mukti or the perfect conscious bliss at the feet of God. The Siva Linga that has been enshrined in the above place is known as the Appu Linga, which is one of the Panchabhuta Lingas, the other four being the idols in Kanchi, Tiruvannamalai, Kalahasti and Chidambaram. The sthala purāṇa of the sacred place has been written by Kachiappa Munivar and Kalamegappulavar has composed a ULA on it.

Tirumangai Mannan one of the twelve Vaishnava alwars has eulogized the king as the builder of seventy temples for the Lord with eight arms. These shrines have been characterised as Madakkoil, their express feature being the lofty dais on two sides of the Gopura, which usually disables the elephant from entering the premises. The King so planned them because of his knowledge of his previous birth and the havoc wrought on the canopy it wove on the crest of the Lord.

A stanza in Purananuru, one of the eight anthologies of the Tamil Sangam period, refers to the big fight that ensued between this Cola and his rival Ceraman Kanaikkal - Irumporai, in which the latter was defeated and incarcerated. The poet tells us that the Cera monarch, who was upset by the supreme non-chalance of the gaol keeper, who wantonly delayed the supply of water, which the king wanted

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.)

குமரகுருபரரும் குழந்தையும்

வளவன்

'தமிழ் கண்டதோர் வைகை பொருநை நதி' பாயும் பாண்டி நாட்டிலே சிறப்புற்று இலங்கும் வைகுண்டம் என்னும் சீர்பதியின்கண் பிறந்து நாடறிய வாழ்ந்து, நானிலத்தில் தம் தேனினுமினிய செந்தமிழ்ப் பாக்களாலே இறவாப் புகழ் பெற்று மறைந்தவர் குமரகுருபர அடிகளாவர்.

அடிகள் இளமையிலே, ஐந்தாண்டளவும் பேசாதிருந்து, பிறகு தமிழ்க் கடவுள் முருகன் அருளாலே பேசும் ஆற்றல் பெற்று 'குமரகுருபர' னென அழைக்கப்பட்டு, இறுதிநாள் வரை அப்பெயருடனே இயங்கி மறைந்தமை அனைவரும் அறிந்ததே.

இடைக்காலத்திற்குப் பின் தமிழில் தோன்றிய சிற்றிலக்கியங்களிலே குமரகுருபர அடிகளால் இயற்றப்பட்ட நூல்களே பெரிதும் சிறப்பிடம் பெறத் தக்கனவாம். மற்றவர்களின் பாடல்களிலே காணப்படும் ஓசையைவிட இவருடைய பாடல்கள் இன்னோசை மிக்கு பாடுவாரையேயன்றி கேட்பாரையும் தன்பால்

(முன் பக்கத் தொடர்ச்சி.)

to slake his thirst, put an end to his existence. The heroism of Sengana has been well-extolled by the poet Poygaiyar in the Kalavazhi Narpatu which is one of the eighteen minor classics in Tamil. The Cera himself was a poet and a poem ascribed to him figures in Purananuru. The devoted Cola is one of the sixty three Canonized Saiva Saints, eulogized by the immortal poet Sekkizhar in his Periapuranam.

ஈர்த்து பிணிக்கவல்ல ஆற்றல் வாய்ந்தவை. அவ்வளவோ? அடிகள் இறுதிநாள் வரை துறவறம் பூண்டு தம் வாழ்வை கடத்தியிருந்தாலும் அவருடைய பாக்களிலே காணப்படும் உலகியல் காட்சிகளையும் அகப் பொருட்டுறைகளையும் இல்லறத்தைப் பற்றிய விளக்கங்களையும் காணும் போழ்து ஒருவேளை இவர் இல்லறம் நடாத்தி, இன்ப துன்பங்களை அனுபவித்திருப்பாரோ என்ற பெரும் ஐயம் எழுவது இயல்பே. ஆனால் உண்மையில் அடிகள் துறவறம் ஏற்று வாழ்ந்து காட்டியவரே ஆவார்.

குமரகுருபர அடிகள் இயற்றிய நூல்களிலே முதலிடம் பெறத் தக்கதும், எல்லாப் பிள்ளைத் தமிழ் நூல்களிலேயும் முதன்மையானதுமான 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' என்னும் நூலேயாகும். அந்நூலில் அடிகள் குழந்தைகளை நீராட்டுவதைப் பற்றியும், அவர்களால் தாய் தந்தையருக்கு ஏற்படும் ஊற்றின்பத்தைப் பற்றியும் தெளிவாக விளக்குவதை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

'தாய்மார்கள் குழந்தைகளை தம் கால்களில் கிடத்தி நீராட்டுவார்கள். பிறகு குழந்தைகளை துணியால் துடைத்து, பூசத் தக்க சுண்ணப் பொடியை பூசுவார்கள்; பூசியபின் நெற்றியில் அழகிய சிறிய பொட்டிடுவார்கள்; பொட்டிட்டு தலைமயிரை நன்ருக வாரிவிட்டு, கழுத்தில் சிறந்த அணியை அணிவிப்பார்கள்; அணிவித்து குழந்தையை எடுத்து தன் மார்பகத்தோடு பொருந்த அணைத்து குமுதவாயில் பாலை ஊட்டுவார்கள். அப்போழ்து குழந்தை வாயின் கடவாயிலே வழியும் பால் தாயின் ஆடையை நனைக்கும்'.

உலகியலிலே நடைபெறும் இக்காட்சியை தம் இனிய பாவிலே நமக்குத் தெள்ளந் தெளிவாக படம் பிடித்துக் காட்டுவதுபோல குமரகுருபர அடிகள் விளக்குகிருர்.

இதோ பாடல்:–

நீராட்டி ஆட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி
நெற்றியில் தொட்டிட் டவெண்
நீற்றிஞெடு புண்டரக் கீற்றுக்கும் ஏற்றிடவொர்
நித்திலச் சுட்டிசாத்தித்

தாராட்டு சூழியக் கொண்டையும் முடித்துத்
தலைப்பணி திருத்திமுத்தின்
தண்ணெளி ததும்பும் குதம்பையொடு காதுக்கொர்
தமனியக் கொப்புமிட்டுப்

பாராட்டு பாண்டிப் பெருந்தேவி திருமுலைப்
பாலமுதம் ஊட்டியொருநின்
பால்நாறு குமுதம் கனிந்தூறு தேறல்தன்
பட்டாடை மடிநனைப்பச்

சீராட்டி வைத்துமுத் தாடும் பசுங்கிள்ளை
செங்கீரை ஆடியருளே
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒருசெல்வி
செங்கீரை ஆடியருளே.

[*செங்கீரைப் பருவம்–1*]

இங்ஙனமெல்லாம் குழந்தைகளை நீராட்டுவதைப் பற்றி பாடுவதற்கு அடிகளின் உள்ளம் உலகியலிலே எவ்வளவு தோய்ந்து ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணி எண்ணி நம் உள்ளம் இன்புற வில்லையா?

அடுத்து இன்னெரு காட்சியை காட்டுவதைப் பாருங்கள்:

'குழந்தை விளையாடிக்கொண்டிருக்கிறது. அண்மையிலே உள்ள தந்தையார் குழந்தையை கையை வளைத்து வருகென அழைப்பதன் முன், குழந்தைதன் மென்பூங்கால்களால் தவழ்ந்து ஓடி வந்து குழலினும் யாழினுமினிய குதலைச் சொற்களை தன் தாய்வயிறு குளிரும்படியாக ஊட்டுகிறது. பிறகு தன் தாய் கைகளைப்பற்றி மார்பின் வழியாக தோள்களின் மேலேறி ஐம் புலனுகர்ச்சியால் கிடைக்கும் எவ்வின்பங்களையும் விட மிக்க இன்பத்தை அளிக்கிறது'—

அப்பாடலும் இதோ :—

உண்ணிலா உவகைப் பெருங்களி துளும்பநின்
றுன்றிருத் தாதைநின்னை
ஒருமுறை கரம்பொத்தி வருகென அழைத்திடுமுன்
ஓடித் தவழ்ந்துசென்று

தண்ணுலா மழலைப் பசுங்குதலை அமுதினிய
தாய்வயிறு குளிரவூட்டித்
தடமார்ப நிறைகுங் குமச்சே றளைந்துபொன்
தாள்தோய் தடக்கைபற்றிப்
பண்ணுலா வடிதமிழ்ப் பைந்தாமம் விரியும்
பணைத்தோள் எருத்தமேறிப்
பாசொளிய மரகதத் திருமேனி பச்சைப்
பசுங்கதிர் ததும்பமணிவாய்த்
தெண்ணிலா விரியநின் றுடும் பசுந்தோகை
செங்கீரை ஆடியருளே
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒருசெல்வி
செங்கீரை ஆடியருளே.

[செங்கீரைப் பருவம்-2]

ஈண்டு, அடிகள் குழந்தை ஓடிச்சென்று தாயின் தோண் மேலேறி, ஊற்றின்பத்தை அளித்து, மழலையின் மூலம் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. குழந்தை தானாக தன் தாய் தந்தையர்களின் மேனியைத் தீண்டி கொடுக்கும் இன்பமே இன்பமாகும். அங்ஙனமின்றி பெற்றோராக குழந்தையை தூக்கிக் கொஞ்சுவதாலோ, தம் உடலோடு பொருந்த அணைப்ப தாலோ அவ்வளவு இன்பம் ஏற்படாது. இதன் நுட்பத்தை பல்லாற்றானும் ஆய்ந்து அறிந்த அடிகள், தமக்கு முன்னுள்ள உயர்ந்த இலக்கியங்களை தெளிவுற கற்று, அழகுற உலகிய லோடு ஒட்ட அமைத்திருப்பது எவ்வளவு சிறப்புற்று விளங்கு கிறது!

இதே கருத்தை கி. மு. முதல் நூற்றாண்டிலேயே அழகாக வும் எளிமையாகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் தெய்வப் புலவர் வள்ளுவனார் விளக்கியிருப்பதைப் படித்துப் படித்து, பேசிப் பேசி இன்புறுகிறோம் அல்லா?

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

என்பதே அது.

செந்நாப் புலவர் இரண்டடிக்கு குறைந்த அடிகளிலே கூறிச் சென்ற இந்தக் கருத்தை, குமரகுருபர அடிகள் நான்கடி விருத்தத்திலே விரித்துப் பாடியிருக்கிறார்.

மெய்க்கின்பம் குழந்தைகள் பெற்றோர்களின் மெய்யைத் தீண்டுதலேயாகும். அவர்களின் செவிக்கு இன்பம் குழந்தைகளின் மழலைச் சொற்களை கேட்பதேயாகும். இந்த குறளின் தெளிவான பொருள் இதுவாயிருக்க, உரையாசிரியர் பரிமேலழகர் வேறு பொருள் பொருந்தாமல் உரைத்தமை காண்க.

வியாச பாரதத்தை மொழிபெயர்த்த வில்லிபுத்தூராரின் ஒரு பாடலைப் பார்ப்போம்:

கல்லால் மழலைக் கனியூறல் கலந்துகொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுதுஓடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர்
இல்லாதவர்க்கு மனைவாழ்வின் இனி என்னும்.

இப்பாடலில் வில்லியார் மகிழ்ச்சி மைந்தர் மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும் சொல்லால் செவிக்கு இன்பம் பயத்தலையும். மல்லார் புயத்தில் ஓடி மெய்க்கு இன்பம் பயத்தலையும் அல்லவோ நன்றாக கூறியிருக்கிறார்!

இவ்வளவு நுட்பமாக குழந்தைகளின் மழலையாலும் மெய்யைத் தீண்டுதலாலும் ஏற்படும் இன்பத்தை எடுத்துக் கூறிய அடிகள் திறம் என்னே! என்னே!!

இங்ஙனம் தம் நூல்களிலே எல்லாம் உலகியல் காட்சிகளையும், பற்பல துறைகளையும் அமைத்து கேட்பாரைக் கவரும் வண்ணம் அமைந்த குமரகுருபர அடிகளின் நூல்களையெல்லாம் கற்க வேண்டுவது நம்மனோரின் தலையாய கடமை அல்லவா?

நால்வர் தமிழ் — நெய்

வேதம் பசு; அதன்பால் மெய்ஆகமம்; நால்வர்
ஓதுந் தமிழ்அதனின் உள்ளூறு நெய் — போதமிகு
நெய்யில் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்யதமிழ் நூலின் திறம்.

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

28

The special feature in the pursuit of supreme bliss, is to have the clear-cut knowledge about God, Soul, and Matter. In seeking God, one should not confuse himself of mortal and immortal, supreme and base beings of the universe. The Supreme Being is eternal and One's aim should be to reach that Supreme Self. If a man cherishes such a divine thought and works resolutely for his salvation, it shall be said of him that he is initiated by God. Our poet-saint reveals here, his high esteem for such clear minded sages in the following couplet.

சித்தம் தெளிந்து சிவமானோர் எல்லோர்க்கும்
கொத்தடிமையான குடிநான் பராபரமே

(பொ–ரை) மனம் தெளிந்து தெய்வீகத் தன்மை பொருந்திய பெரியோர்களுக்கெல்லாம் நான் அடிமையாவேன்.

Oh........Lord Supreme! I am a slave for all those divine sages who have attained enlightenment of mind and thereby the grace of God Siva.

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Art's College, Arulnandi Nagar.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருக்கோத்தும்பி

இனி, அருள்வதான திருக்கோத்தும்பியான திருவருள் விணியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன; இதன் உள்ளக் கிடை சிவனுைடைக்கியம், சிவனுடன் இடையறுது நிற்றல்.

'உயர்போத மொருவண்டாகச், சித்த விகாரத் தூது செப்பி விடல் கோத்தும்பி' என்பது பழைய திருப்பெருந்துறைப் புராணம்.

"ஞாங்கரின் முரலுந் தும்பி தன்னையு நயந்து நாதன், பூங்கழல் வழுத்துகென்று புனிதர் கோத்தும்பி சொன்னுர்' (திருவாதவூரர் புராணம்; திருவம்பலச்சருக்கம் 66).

'யான் எனது' என்னும், செருக்காற் குஞ்சிதபாதம் அறியலாகாது.

நானுரென் னுள்ளமார் ஞானங்களா ரென்னையாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேன் மதிமயங்கி
ஊனுருடை தலையி னுண்பலிதே ரம்பலவன்
றேனுர் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

(இ – ள்). ஞானப் பெண்களே! கேண்மோ! பரமசிவன் அநாதியே மலபந்தமான உயிர்க்குப் பெருங்கருணை வழக்கால் இரங்கி, அறிவு விளங்கக் கருவிகரணம் அருளி, அடிமை

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை–திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- டி நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.

செய்யாவிட்டால் எவ்வகை அறிவுண்டாவது? அவ்வறிவால், 'நான்; எனது' என்ற உயிரேது? அவ்வுயிர்க்கு அந்தக்கரணம் ஏது? அவற்ருல் அறியும் ஞானமேது? எவர்கட்கு எனது நாம ரூபந் தெரிவதுள? ஆனதால், சகல தேவர்கட்கும் மேலான மகா தேவரென்று விளங்க, மதிமயக்கத்தாற் படைப்புத் தொழில் தனது சுதந்தரமென்று நினைத்த அயன் தலையைக் கிள்ளி, அது நாற்றம் எனத் திருவுளங் கொள்ளாது, திருக்கர பாத்திரமாகப் பரிபாக உயிர்ப்பலி கொள்ளுவதான சிவானந்தத்தேன், அடியா ருள்ளத்திற் சொரியு மிருதய கமல நடராச குஞ்சிதபாதத்தை நிட்டை கூடி, தும்பி பறந்து விளையாடுவீர்கள்; ஞானப் பெண் களே! என வருளியதைக் காண்க.

முருகன் மேல் தோத்திரக் கண்ணிகள்

1. சிவ சண்முகனே அருள்வடி வேலனே
குகனே சீலனே கூர்வடிவே லனே

2. குமரக்குருபர வடிவே குகனே
சிவனருள்சீலா அருள்உமை பாலா

3. அருள்வடிவேலா சக்தி உமைபாலா
திருவடிதுணையே சரணம் சரணம்.

4. சங்கரன் மைந்தனே சண்முகநாதனே
எங்கும் அமர்ந்திடும் ஐயனின் பாலனே

5. சிவனருள்குமரா செந்தில் வேலனே
பவவினை போக்கிடும் பரமதயாளனே

6. அருள்வடிவேலனே குன்றம் அமர்ந்திடும்
குருபரனே குக,சிவ சண்முகனே

7. கந்தா கடம்பா கதிர்வடிவேலா
செந்தூர்வாழும் சிவனருள் பாலா

8. முருகையனே மால்மருகா குகனே
திருமறை போற்றிடும் திவ்ய சொருபனே

9. அன்னைபார்வதியின் அருள் உமைபாலா
குன்றம் அமர்ந்திடும் குகனேசரணம்.

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 17, இதழ் 2-ன் தொடர்ச்சி]

III

SUNDARAMURTI SWAMI

(Abbreviated as SUNDARAR)

67. கீளார்கோவணமுந்திருநீறுமெய்ப்பூசியுன்றன்
ருளேவந்தடைந்தேன்றலைவாவெனையேன்றுகொணீ
வாளார்கண்ணிபங்காமழபாடியுண்மாணிக்கமே
கேளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே.

67. Clad in the little loin-cloth, my body with holy ash white,
Lo I have come to Thy foot; O my head, I beseech Thee, take me.
Portion of sword-eyed Uma, Thou red ruby of Malapadi,
Friend, 'tis on Thee, none but Thee, can my heart evermore fixed be.

—— (To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

செந்தினகர்ச் சேவகன்

திரு. சி. குமாரசுவாமி அவர்கள்

செந்தினகர் என்பது திருச்செந்தூர். சிலப்பதிகாரம் இப்பதியைச் "சீர்கெழு செந்தில்" என்கிறது. நக்கீரர், திருமுருகாற்றுப் படையில், 'திருச்சீரலைவாய்' என்கிறார். ஜயந்திபுரம் என்னும் பெயரும் உண்டு.

இங்கு எழுந்தருளியுள்ள ஷண்முகப் பெருமானே சேவகன். சேவகன் என்றால் ஊழியன், வீரன் என இரு பொருள்படும். முருக பக்தர்கள் "செந்திலாண்டவன்" என்று பக்தியோடு கூறுவர்.

செந்தினகர்ச் சேவகனருளால் 1) ஊமையாக இருந்த குமரகுருபரர் பேச முற்பட்டு "கந்தர் கலிவெண்பாவைப் பாடியருளினார். 2) வைணவ அந்தணர் குலத்துதித்த பகழிக்கூத்தர் தமக்கேற்பட்ட வயிற்றுவலி நீங்கப் பெற்றார். அதன் பயனாகத் "திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்" நமக்குக் கிடைத்தது. 3) ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரை வாட்டிய க்ஷய நோய் நீங்கியது, ஆகவே அவர் ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்தைப் பாடித் துதித்தார்.

அருணகிரிநாத சுவாமிகள் முருகனைச் சேவகன் என்று அழைக்கிறார். "மயிலேறிய சேவகனே" (அநுபூதி. 25), 'அத்திதிபுத்திரர் வீறடு சேவகனே" (அநுபூதி. 50), "செந்தின் மேவிய சேவகனே!" (அலங். 106) "மலையொடு பொருத முழுச் சேவகனே" (சேவகன் வகுப்பு).

கந்தர் அலங்காரத்தில், "செந்தூர் வயற்பொழில்" (40), "சேயானவேற் கந்தனே செந்திலாய்" என்று செந்தினகரைக்

குறிப்பிடுகிறார். மேலும், அருணை முனிவர் அருளிய திரு வகுப்புகளில், "திருச்செந்தில் வகுப்பும்" "சேவகன் வகுப்பும்" அடங்கியது குறிப்பிடத் தக்கது.

ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடு திருச்செந் தில். இங்கிருந்து கொண்டுதான் ஷண்முகப் பெருமான் சூரனை வென்று வாகை சூடியதாக வரலாறு. ஆகவேதான் இத்தலம் ஜயந்திபுரம் எனப்படுகிறது.

செந்திற் கந்தன், தனது திருநோக்கால் ஊழ்வினையைப் போக்குபவன். கருணைத்திருஉரு உளந்தனிற்கண்டு ஆதரிப் போர்க்கு ஆருயிராய் அன்பரகத் தாமரையின் மீதிருக்கும் தெய்வ விளக்கொளி. எந்தத் திசையும் எதிர்தோன்ற வந்து, இடுக்கண் எல்லாம் பொடிபடுத்தி யெவ்வரமும் தந்து புகுந்து உல்லாசமாக உள்ளத்தில் இருப்பவன்.

குமரகுருபர சுவாமிகள், முருகப் பெருமானை "சம்பரணைப் பொரு சேவகன் வந்தான்", "செந்தினகர்ச் சேவகா" என்று விளித்துள்ளார்.

சகல வியாதிகளையும் போக்கும் அநாதரக்ஷகா என்று செந்திலாண்டவனைத் துதிக்கிறார் ஸ்ரீ ஆதிசங்கரர். இதோ அத்துதிகள் :—

"யதாப் தேஸ்தரங்கா லயம்யாந்தி துங்கா:
ததை வாபதஸ் ஸந்நிதௌ ஸேவதாம்மே,
இதீவோர்மி பங்க்தீர் ந்ருணும் தர்சயந்தம்
ஸதா பாவயே ஹ்ருத் ஸரோஜே குஹம்தம்!"

(சுப்ரம்மண்யபுஜங்கம் – 5)

"பரசாந் தேந்திரியே நஷ்ட ஸம்க்ஞே விசேஷ்டே
கபோத் காரிவக்த்ரே பயோத்கம்பி காத்ரே!
ப்ரயாக்ஞேந் முகே மய்யநாதே ததாநீம்
த்ருதம்மே தயாளோ பவாக்ரே குஹத்வம்".

(சுப்ரமண்யபுஜங்கம் – 20)

செந்தினர்ச் சேவகா! என்று திருநீறு அணியும் அன்பர் களை எவ்வித வினையும் துன்பமும் வந்தடையாது. நம்மை

வந்தடைந்த துன்பமும், இனிவரப்போகும் கொடிய துன்பமும் கந்தனென்று சொன்னதும் பயப்படும், என்று குமரகுருபர சுவாமிகள் உறுதியாகக் கூறுகிறார். இதோ அப்பாடல்:—

"வந்தவினையும் வருகின்ற வல்வினையும்
கந்தன் என்று சொல்லக்கலங்குமே—செந்திநகர்ச்
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவவாராதே வினை."

அடியார்களது வியாதிகளையும் தீமைகளையும் பொடி படுத்துவதால் செந்திலாண்டவனை வீரன் எனப்போற்றி வணங்குகிறோம். அடியார் பொருட்டு இக்காரியத்தைச் செய்வதால் ஊழியன் என்று துதிக்கிறோம். அன்பர்களின் ஊழியனுயும், அன்னாரின் துன்பங்களைத் துடைத்துக்காக்கும் வீரனுயும் உள்ள பெருங்கருணைப் பேராளன் செந்திநகர்ச் சேவகன்! ஆகவே முருகனன்பர்கள் திருநீறு அணியும் போது அவசியம் ஸ்ரீ குமர குருபரசுவாமிகள் அருளிய மேற்கண்ட பாடலைக் கூறி அணிதல் வேண்டும். அதுமிக்க நலம் பயக்கும்.

"மாசில் அடியார்கள் வாழ்கின்ற ஊர்சென்று
தேடி விளையாடியங்ஙனே நின்று வாழ்கின்ற
வீரனே செந்தில் வாழ்கின்ற பெருமாளே!" (திருப்புகழ்)

முருகா சரணம்!

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–19 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 2–25 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	7½ ஷிலிங் அல்லது ரூ. 4–88 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

சிவ சிவ

The Raja of Ramnad Memorial Feeding Charity at Varanasi.

(Fourth Additional Endowment) Rs. 12000/-

This endowment is founded by His Holiness Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal avergal of Sri Kasimutt, Tirupanandal in memory of Srimath Bavani Sankararama Raja Sethupathi Kaththa Ragunatha Thevar Avl., Raja of Ramnad who in the Salivahana Year 1646 (27th Ani, Keelaka) made free gift of the entire village of Thalirmarungur in Tiruvadanai Taluk of Ramnad District and executed a copper plate in favour of our revered Predecessor-in-Title, Srilasri Kasivasi Thillainayaga Tambiran Swamigal for conducting daily feeding charity at Banaras.

The Government took over the village under the Estates Abolition Act of 1948. We founded an endowment No. 223 வாரஞ்சியில் சேதுகாவலர் நினைவு அன்னம்பாலிப்பு on 27-10-1956 for Rs. 5000/-with the interim compensation received in October 1956 for the daily feeding of Brahmins and Saivites in our mutt at Banaras.

The Government then sanctioned Rs. 33034-29 under the Rent Reduction Act 1947 in G. O. Ms. 1761 dated 26—4—1957 and with that amount an additional endowment (No. 243) was made in memory of the said Raja of Ramnad for Rs. 40,000/- on 18-9-1957 for conducting daily feeding charity (Brahmins feeding, Maheswara Pooja and poor feeding) at Banaras.

The Government have afterwards sanctioned Rs. 1,01,594-43 under the Madras Estates (Abolition &Conversion into Ryotwari) Act 1946 under Section 38

(i) and 38 (ii) and deficiency to be made good to the institution under section 54 (2) in G.O. Communicated in Collector's letter Roc. z. 2. 12729/65 dated 23-2-1965 cited in Roc. A 5. 5400/65 dated 24—5—1965 and 7-6-1965 of the Tahsildar of Tiruvadanai and out of this amount a sum of Rs. 52,000/-was utilised to make a **second additional Endowment No. 368**.on 8-10-1965 in memory of the above said Raja of Ramnad for conducting daily feeding charity (Brahmin feeding&Maheswara Pooja) at Banaras.

With the balance left after founding the above said second additional endowment, **a third additional endowment** No. 369 for a sum of Rs. 50,000/- was made on 14-10-1965 in memory of the above said Raja of Ramnad for conducting daily feeding charity (Brahmin feeding&Maheswara Pooja) at Banaras.

The Government have now sanctioned as per proceedings of the Revenue Divisional officer, Devakottai Roc. A. 5. 23577/65 dated 23-2-1966 in G. O. No. 231 dated 17-1-1962 and G. O. 384 dated 15-2-65 under section 38 (1) Rs. 2282-58 and under section 38 (2) Rs. 8927-74 Total Rs. 11210-30 and with this amount a FOURTH ADDITIONAL ENDOWMENT for a sum of Rs. 12,000/-is now made in memory of the above said Rajah of Ramnad for conducting daily feeding charity (Brahmin feeding and Maheswara Pooja) with the interest derived from this capital in our Kumaraswami Mutt, Kedar Ghat, Varanasi in addition to the other feeding charities conducted according to the other endowments already made. This endowment shall be called "THE RAJA OF RAMNAD MEMORIAL FEEDING CHARITY AT BANARAS-FOURTH ADDITIONAL ENDOWMENT".

2. The capital of this endowment is Rs. 12,000/- invested in Fixed Deposits at Rs. 6000/- in the Indian Bank Ltd., Kumbakonam for a period of 9 years at 7½% interest per annum. No. 65 F. D. B-002509 dated 7—3—1966 and Rs. 6000/- in the Canara Bank Ltd., Kumbakonam for a period of 9 years at 7½% interest per annum No. 488973 dated 7—3—1966. The administration of the fund shall vest in us and our successors in interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for conducting daily feeding charity (Brahmin feeding and Maheswara Pooja) in our Mutt at Banaras (Varanasi) in addition to the other feeding charities founded by us.

4. The feeding shall be conducted according to the Thitta Japtha (Budget) prepared by us and our successors in interest which will depend upon the interest accrued and the prices of commodities then prevailing.

5. The endowment will not be diverted to any purpose other than the one mentioned above. The capital may from time to time be invested in Government Securities or Fixed Deposits fetching high rate of interest. The capital shall always stand in our name and our successors in interest.

Tirupanandal
Dated 8-3-1966 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvidamaruthur Sub Registrar's Office on 11-3-1966 as No. 8 of 1966 of Book 4. Volume 53 pages 104 to 106.